**<u>இயக்கூர்தி விபத்துக்கள் கோருரிமை தீர்ப்பாயம், கோபிசெட்டிபாளையம்</u>**

2025 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 24-ம் நாள் திரு.S.இராமச்சந்திரன், B.L., மூன்றாவது கூடுதல் மாவட்ட நீதிபதி அவர்களின் முன்னிலையில் உரிமையியல் நடைமுறைச் சட்டம் மற்றும் விதிகளின் படி உறுதிசெய்யப்படுகிறது.

MCOP.No. 280/2024

**ம.சா. 1**

**திருமதி. பிரபாவதி**

**சாட்சி மனுவின்பேரில் மீண்டும் அழைக்கப்பட்டு முதல் விசாரணை தொடர்ச்சி**

நான் பாலாஜி டைல்ஸ் என்ற நிறுவனத்தில் ஒரு பங்குதாரர் என்று காண்பிக்க 20-07-2006 தேதியில் ஏற்படுத்திக்கொண்ட கூட்டாண்மை ஒப்பந்தத்தை தாக்கல் செய்கிறேன். மேற்படி ஆவணத்தின் ஜெராக்ஸ் நகல் **ம.சா.ஆ.13 ஆக** குறியீடு செய்ய வேண்டுகிறேன். மேற்படி நிறுவனத்தில் நான் செயல் பங்குதாரராக பணியாற்றி வந்தேன். **(3ம் எதிர்மனுதாரர் தரப்பு வழக்கறிஞர் மேற்படி ஆவணத்தின் உண்மை தன்மை பொறுத்து ஆட்சேபனை செய்தார். ஆட்சேபனைக்குட்பட்டு மேற்படி ஆவணம் குறியீடு செய்யப்படுகிறது)**

**வேண்டுகோளின்படி குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.**